## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம், இருப்புக்களானது கிரயம் மற்றும் தேறிய கைக்கிட்டிய பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்பட்டு | இருப்புக்கள் நுகர்விற்காக மாத்திரமே பேணப்பட்டு வருகின்றன. இலாபமீட்டுவதற்காக அல்ல. ஆகையால் இது கிரயத்தில் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் இருப்பில் உள்ளடக்கப்பட்ட உதிரிப் பாக இருப்புக்கள் மற்றும் ஏனைய இருப்புக்கள் தேறிய கைக்கிட்டிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படாமல் கம்பனியால் ரூபா 17,573,131 கிரயத்தில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன ஒவ்வொரு நிதியாண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் பெறுமானத்தேய்வு அறவீடு பூச்சியமாக உள்ள ரூபா 1,272,606,488 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் சரியான முன்கொண்டு செல்லும் பெறுமதியை காட்டுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எல்கேஏஸ் 16 இன் 79(ஆ) பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மேலும் தற்போது பெறுமானத்தேய்வுப் பெறுமதி வருடாந்தம் பரீட்சிக்கப்பட்டு உரிய சீராக்கங்கள் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) அரசாங்க மானியத்தின் காலக்கழிவிற்காக கம்பனியால் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை கணக்குகளிற்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசாங்க மானியமானது ஐரீஎன் அலைவரிசைக்கு கிடைத்த மானியம் அது பெறப்பட்ட ஆண்டின் பின்னர் வருகின்ற ஆண்டிலிருந்தும் ஐரீஎன் எவ்எம் இற்கு கிடைத்த மானியம் அது பெறப்பட்ட ஆண்டிலிருந்தும் வருடாந்தம் 12.5 சதவீதம் காலக்கழிவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க அரசாங்க மானியத்தின் காலக்கழிவிற்காக | அரசாங்க மானியம் மீது பெறப்பட்ட உபகரணம் அத்தகைய உபகரணம் பயன்படுத்தப்படும் அடிப்படையில் காலக்கழிவிடப்படுகின்றன (எஸ்எல்ஏஎஸ் 18). சொத்துக்களின் பெறுமானத்தேய்விற்கான கொள்கை எஸ்எல்ஏஎஸ் 18 இன் பிரகாரம் மானியம் கிடைத்த ஆண்டின் பின்னர் வருகின்ற ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்விடுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. அக் கொள்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது கிடைத்த மானியத்தின் காலக்கழிவு 2018 | அரசாங்க மானியங்களின் காலக்கழிவிற்காக பொதுவான கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியால் பொதுவான கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அனைத்து அலைவரிசைகளிற்கும் பெறப்பட்ட அனைத்து அரசாங்க மானியத்தின் காலக்கழிவிற்காக பொதுவான கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கம்பனியால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்விற்கான கட்டிடத்தின் பயன்தரு ஆயுட்காலம் 20 ஆண்டுகளாக காணப்பட்டது. எனினும் ஐரீஎன் எவ்எம் இற்குச் சொந்தமான கட்டிடங்களானது பயன்தரு ஆயுட்காலம் 25 ஆண்டுகளாக கருதப்பட்டு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்விற்காக ஒரே சதவீதம் பிரயோகிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையிலிருந்து தனியாக எவ்எம் அலைவரிசை கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றமடைந்திருந்தது. பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றமடைவதன் காரணமாக பொருண்மையான தாக்கம் ஏற்பட்டிருக்காததுடன் தேவைப்பட்டால் பெறுமானத்தேய்வு சதவீதம் எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டும். | கட்டிடத்தின் பெறுமானத்தேய்வு வெளிப்படுத்தப்பட்ட கொள்கைக்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட கணாமெதிரியோ தொலைக்காட்சி நாடகத்தின் 43 அத்தியாயங்களிற்காகவும் (episodes) தெயியன்கே ரட்டே தொலைக்காட்சி நாடகத்தின் 51 அத்தியாயங்களிற்காகவும் ஏற்பட்ட முறையே ரூபா 7,310,000 மற்றும் ரூபா 8,670,000 தொகைகள் மீது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,096,500 மற்றும் ரூபா 1,300,500 தொகையான பெறுமதி சேர் வரிப் பெறுமதிகள் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவு செலவினத்தின் கீழ் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் அச் செலவினம் மற்றும் ஆண்டிற்கான நட்டம் என்பன ரூபா 2,397,000 தொகையால் | ஒளிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் குறிப்பிடத்தக்களவு தொகையான உறுதிச்சீட்டுக்கள் ஆண்டின் போது தயாரிக்கப்பட வேண்டியிருந்தன. அத்தகைய நிலைமைகளில் தவறுகள் ஏற்பட முடிவதுடன் அதற்கிணங்க அவ் உறுதிச்சீட்டுக்களில் சிறிய அதிகரித்துக்காட்டுதல்கள் மற்றும் குறைத்துக்காட்டுதல்கள் காணப்படக்கூடும். மிகவும் நெருங்கிய சரியான பெறுமதிக்காக அட்டுறுப் பெறுமதிகள் எடுக்கப்படுகின்றதுடன் ஆண்டிற்கான நட்டம்/ இலாபத்திற்கு பொருண்மையான தாக்கம் | பெறுமதி சேர் வரி செலவினமாக கணக்குகளிற்கு எடுக்கப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும் பெறுமதி சேர் வரி (உள்ளீடு) பெறுமதி செலவினமாக காட்டப்பட்டதன் காரணமாக செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரிப் பொறுப்பு ரூபா 2,397,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஒளிபரப்புச் செய்யப்பட்ட 22 உள்ளூர் திரைப்படங்கள், 13 வெளிநாட்டு திரைப்படங்கள் மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகமொன்றின் ஒரு அத்தியாயம் என்பவற்றின் கொள்வனவுக் கிரயம் கணக்குகளிற்கு இரண்டு தடவை எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் ஆண்டிற்கான நட்டம் மற்றும் அட்டுறு செலவினங்கள் ரூபா 3,949,504 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | -மேற்படி- | செலவினம் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 11 இல் ஒளிபரப்புச் செய்யப்பட்ட சமிதாப் (Shamitabh) பெயரையுடைய வெளிநாட்டுத் திரைப்படத்தின் உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 162,110 ஆக இருந்த போதிலும் இது கணக்குகளிற்கு ரூபா 392,935 ஆக எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அட்டுறு செலவினம் என்பன ரூபா 230,825 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும் அத் திரைப்படத்தின் அவ்வாறான செலவினம் அருவச் சொத்துக்களிற்கு மாற்றப்பட்டிருந்ததனால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அருவச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 230,825 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அத் திரைப்படத்திற்கான காலக்கழிவுச் செலவினம் ரூபா 207,752 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | செலவினம் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 8 வருடமாகவுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரு ஆயுட்காலத்தினுள் அச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட அரசாங்க மானியம் காலக்கழிவிடப்படுமாறு கணக்கீட்டுக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க 2008 ஆம் ஆண்டில் ஐரீனன் அலைவரிசைக்கு பெறப்பட்ட ரூபா 31,221,094 அரசாங்க மானியத்தின் காலக்கழிவு ஆண்டொன்றிற்கு ரூபா 3,902,637 வீதம் காலக்கழிவிடப்பட்டு 2016 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலக்கழிவிடப்படாமல் ரூபா 4,467,741 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.<br><br>எனினும் அம் மானியம் 2018 ஆம் ஆண்டின் போது காலக்கழிவிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அக் காரணத்தின் விளைவாகவும் பல ஆண்டுகளிற்கு மேலாக பிழையான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாலும் மொத்த அரசாங்க மானியக் கணக்கில் இருக்க வேண்டிய மீதி ரூபா 12,500,000 ஆக இருந்த போதிலும் இது ரூபா 15,615,264 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான நட்டம் என்பன நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,467,741 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | எஸ்எல்ஏஎஸ் 18 இற்கு இணங்க 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட ஆண்டின் பின்னர் வருகின்ற ஆண்டிலிருந்து காலக்கழிவிடுமாறு நிறுவனத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2008 ஆம் ஆண்டின் அரசாங்க மானியத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணத்தின் காலக்கழிவு 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அரசாங்க மானியங்கள் காலக்கழிவிடப்பட்டிருந்ததுடன் இது 2010 ஆம் அண்டு வரை காணப்பட்டது. ஆகையால் கணிப்பீட்டுத் தவறு எதுவும் காணப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறு தொகையில் மானியங்கள் பெறப்பட்டிருந்ததன் காரணமாக ஒவ்வொரு ஆண்டிலும் ஒரே தவணைப்பணத்தில் காலக்கழிவு மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. மேலும் பெறப்பட்ட மானியத்தின் பெறுமதிக்குச் சமமாக கணக்குகளில் காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க கணக்குகளில் அதிகரித்துக் காட்டல் எதுவும் காணப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை கருத்தில் கொண்ட பின்னர் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காலக்கழிவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரரொருவரிற்கு கம்பனியால் செலுத்தப்பட்ட ரூபா 3,651,354 வேலை ஆரம்பிப்பு முற்பணத்தில் ரூபா 2,214,499 தொகை 2017 யூலை | சீராக்கத்தை மேற்கொள்வதற்கு விநியோகப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நிதிப் பிரிவில் மேற்கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டுப் பதிவுகள் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான சீராக்கம் முற்பணக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நிதி நிலைமைக் கூற்றில் முற்பணங்களின் பெறுமதி ரூபா 2,214,499 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | ரூபா 46,641,252 தொகையான ஐரீஎன் எவ்எம் இன் நீண்டகால மற்றும் குறுங்கால நிலையான வைப்புக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட வட்டி வருமானத்திற்குரிய ரூபா 294,034 தொகையான பிடித்துவைத்தல் வரி பெறவேண்டிய வட்டியாக பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ஆண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் பிடித்து வைத்தல் வரி என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | வட்டி வருமானத்தில் காணப்படுகின்ற பிடித்து வைத்தல் வரி தாமதமொன்றில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் இது போதுமான தொகையாக இருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 280,307 தொகையான ஓய்வூதியப் படிக் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட காசோலையின் பெறுமதி ஓய்வூதிய நலன் பொறுப்புக் கணக்கிற்கு தவறுதலாக செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 6 மாத காலப்பகுதிக்கு மேலாக கொடுப்பனவிற்காக வங்கிக்கு காசோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன் காரணமாக கடன்கொடுத்தோரை உருவாக்குவதற்குப் பதிலாக வழியிலுள்ள காசுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இன்னொரு உத்தியோகத்தரிற்கு செலுத்த வேண்டிய பணிக்கொடையில் கம்பனியால் அறவிடப்பட்டிருந்த மாதாந்த சம்பளத்திற்கு சமமான ரூபா 34,570 தொகை காசுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக தவறுதலாக ஓய்வூதிய நலன் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டின் போது ஓய்வூதிய நலன் கணக்கின் செலவுப் பதிவொன்று வரவுப் பதிவொன்றிற்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
| --- | --- | --- | --- |
| | ஆகையால் ரூபா 245,737 வரவு மீதி வழியிலுள்ள காசுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | ஒவ்வொரு ஆண்டிலும் கம்பனியால் ஒளிபரப்புச் செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களின் கிரயம் அருவச் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 19,500,000 தொகையான 2018 ஆம் ஆண்டில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட பினி, ரண்ஹிருராஸ் மற்றும் சிறகாரி பெயரையுடைய 03 தொலைக்காட்சி நாடகங்களின் 106 அத்தியாயங்களின் பெறுமதி அருவச் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சொத்துக்களின் கிரயம் மற்றும் காலக்கழிவு என்பன முறையே ரூபா 19,500,000 தொகையாலும் ரூபா 17,550,000 தொகையாலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்த தொலைக்காட்சி நாடகங்களை உறுதியாக இனங்காண்பதில் தாமதமொன்று காணப்பட்டதுடன் இது ஆண்டிற்கான இலாபம்/ நட்டத்திற்கு தாக்கமளித்திருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் குறைபடாக இது குறிப்பிடப்பட முடியயும். | அருவச் சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஐ) | நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 3,053,880 தொகையான ஊழியர் கடன் மீது அறவிடப்பட்ட வட்டி வருமான வரியை கணிப்பீடு செய்வதற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருக்காததால் 2018 ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு ரூபா 855,086 (3,053,880 X 28%) தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 180,240 தொகையான இருப்புக்களின் பதவழித்தல் பெறுமதி வருமான வரிக் கணிப்பீட்டிற்காக எடுக்கப்பட்டிருக்காததன் விளைவாக 2018 ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு ரூபா 50,467 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சாதாரண இலாபம்/ நட்டத்தை கருத்தில் கொள்ளும் போது ஊழியர் கடன் மீது அறவிடப்பட்ட வட்டி கருத்தில் கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் இலாபம்/ நட்டம் தொடர்பாக வருமான வரி கணிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால் வருமான வரிப் பொறுப்பில் எந்தவொரு குறைவும் ஏற்பட்டிருக்காததுடன் வருமான வரிச் சட்டத்தின் 6 மற்றும் 7 ஆம் பந்திகளின் பிரகாரம் வரிக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதில் பிழையாக உள்ளது. கணக்கீட்டு ஐயவினாவை மீளக் கருத்திற்கொண்டதன் பின்னர் வருமான வரிப் பொறுப்பு சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |
| (ஒ) | கம்பனியின் ஜரீஎன் எவ்எம் இற்குச் சொந்தமான ரூபா 6,468,390 கிரயமான கட்டிடம் 5 | பெறுமானத்தேய்விற்காக ஒரே சதவீதம் பிரயோகிக்கப்பட்டிருந்தது. | வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| சதவீதம் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் பெறுமானத்தேய்வுகள் 4 சதவீதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 64,683 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏனெனில் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையிலிருந்து தனியாக எவ்எம் அலைவரிசை கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றமடைந்திருந்தது. பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றமடைவதன் காரணமாக பொருண்மையான தாக்கம் எதுவும் ஏற்பட்டிருக்காததுடன் தேவைப்பட்டால் எதிர்காலத்தில் பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றப்பட வேண்டும். | பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் தேறிய சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நட்டங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டிற்கான சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் நட்டம் ரூபா 534,591,954 ஆக காணப்பட்டதுடன் வசந்தம் ரீவீ, ஐரீஎன் எவ்எம் மற்றும் வசந்தம் எவ்எம் இன் நட்டங்கள் முறையே ரூபா 41,505,921, ரூபா 43,225,363 மற்றும் ரூபா 8,287,474 ஆக காணப்பட்டன. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் மொத்த நட்டம் ரூபா 627,610,712ஆக காணப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மைக்காக தேறிய சொத்துக்கள் அதிகரிக்கப்பட வேண்டும் |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 116,689,916 வாடிக்கையாளர் முற்பண மீதியில் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 20,253,075 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் அம் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் பிரிவால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அப் பெறுமதிகளிற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது பொறுப்பொன்றாக காணப்படாததால் பொறியியல் பிரிவுடன் கலந்துரையாடிய பின்னர் இந்த ஆண்டில் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாமதமின்றி அவ் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 51,470,120 பிற்போடப்பட்ட கொடுப்பனவு மீதியில் 5 ஆண்டுகளை விடக் குறைந்த ரூபா 14,291,126 தொகை, 5 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட ரூபா 29,477,593 தொகை மற்றும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 7,101,400 தொகையான மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | இது முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செலுத்த வேண்டிய பெறுமதிகள் அல்லது வான் காலத்தால் உருவாக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய காலப்பகுதிகளின் போது இது தொடர்பாக உரிமைக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன் காரணமாக இந்த ஆண்டின் கணக்குகளிற்கு எடுப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தல்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன் விளைவாக இது நட்டத்தைக் குறைப்பதற்கு அல்லது இலாபத்தை அதிகரிப்பதற்கு தாக்கம் செலுத்தும். | கணக்கு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 3 ஆண்டுகளிற்கு மேலாக கொடுப்பனவிற்காக | வாடிக்கையாளர்களால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததும் செல்லுபடியாகும் காலப்பகுதியினுள் பெறப்பட்டிருக்காததுமான | பொறுப்புக்கள் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 4,423,745 ஆக காணப்பட்டது. அப் பெறுமதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | அவர்களின் இரத்துச் செய்யப்பட்ட காசோலையால் இப் பெறுமதி உருவாக்கப்பட்டிருந்தது. வாடிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது உரிமைக் கோரிக்கைகள் காணப்பட்டால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆகையால் செலுத்த வேண்டிய கணக்கு மீதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிதிக்கூற்றில் செலுத்த வேண்டிய மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1,515,129 உரிமை கோரப்படாத மீதியில் 3 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக கோரப்பட்டிருக்காத ரூபா 502,739 மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் அதனை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது வருமானமாக கணக்குகளிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத் தொகையை கண்டுபிடிப்பதற்கும் கணக்குகளிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமை கோரப்படபடாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததும் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுமான ரூபா 36,564,467 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுமொத்தம் தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. இது சர்ச்சைக்குரிய விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது. | செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பான தகவல்களை சேகரித்து சரியான நிலைமையை உறுதிப்படுத்திய பின்னர் இந்த ஆண்டில் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 | மீளாய்வாண்டிற்கான வரைபு வருடாந்த | பணிப்பாளர் சபையின் கூட்டம் நடைபெற்றதில் | உரிய காலப் பகுதியினுள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | அறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் அத்தகைய தாமதங்களை தவிர்த்து உரிய காலப்பகுதியினுள் நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் எல்லை 170 லீற்றர்களாக உள்ள போதிலும் காலத்திற்கு காலம் கம்பனியில் சேவையாற்றிய 03 தலைவர்களிற்கு ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட எல்லையை 1,155 லீற்றர்களால் விஞ்சி எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளை போல் ஆண்டின் போதும் பணிபாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பிஈடி 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | நிறுவனத்தின் நட்டத்தை இழிவுபடுத்தும் நிபந்தனைகள் மற்றும் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல் என்பன மிகையுதியங்களிற்கு தகைமைபெறுவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆண்டிற்கான நட்டம் அதிகரித்த நிலைமை மற்றும் 29 நாட்கள் தாமதமொன்றுடன் 2019 மார்ச் 29 இல் 2018 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலைமையில் ஒவ்வொன்றும் ரூபா 28,000 வீதம் மீளாய்வாண்டின் | சேவையின் தேவைப்பாட்டின் பிரகாரம் கடமை எல்லையை விஞ்சி சேவை வழங்குவதற்கு சாத்தியமான பதவியணியினரை பேணுவதற்காக தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் மீது அவ் மிகையுதியங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

போது மிகையூதியமாக ரூபா 14,101,020 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை

| | | |
|---|---|---|
| (i) Youth with Talent Season 2 நிகழ்ச்சித்திட்டத்தின் மாபெரும் இறுதிச் சுற்றுக்காக (Grand finale) பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமல் மேடை பின்னணி மற்றும் ஏனைய உப கருவிகளை வழங்கியமைக்காக ரூபா 2,400,000 தொகையும் ஒளியூட்டல் முறைமை, வீடியோ திரைகள் மற்றும் ஏனைய உப கருவிகளிற்காக ரூபா 2,200,000 தொகையும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் செலவிடப்பட்டிருந்தன. | அந் நிகழ்ச்சித்திட்டத்தை பதிவிடுதல் அந் நிறுவனத்தால் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் ஏனைய நிறுவனத்திடமிருந்து சேவைளை பெற்றுக் கொள்வதால் குறைபாடுகள் ஏற்படும் ஆபத்துக் காணப்படுதல் மற்றும் அதே போல் தேசிய மட்ட உண்மையான நிகழ்ச்சியாக (reality show) இது காணப்படுதல் என்பன காரணமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) கும்பியோ (Kumbio) தொலைக்காட்சி நாடகத்தின் மாபெரும் இறுதிச் சுற்று தொடர்பான நேரடி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று (live promotion programme) கொழும்பிலுள்ள மிகச் சிறந்த 5 ஸ்ரார் ஹோட்டல்களில் ஒன்றில் நடாத்தப்பட்டிருந்ததுடன் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் வாய்மொழி மூல அறிவுறுத்தல்களின் அடிப்படையில் உதவி முகாமையாளரால் இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மிகவும் விசேடமான மட்டமொன்றில் கும்பியோ தொலைக்காட்சி நாடகத்தின் நேரடி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கான தேவையொன்று முகாமைத்துவத்திற்கு காணப்பட்டதுடன் இது தொடர்பாக இடமொன்றை தெரிவு செய்வதற்கு பெறுகை நடைமுறையை பின்பற்றுவதற்காக நடைமுறையில் பிரச்சனை காணப்பட்டது. எனினும் இது தொடர்பாக நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் என்பன வழங்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் வழங்கல்கள் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 627,610,711 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 295,924,136 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் 112 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 331,686,575 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வான் கால விற்பனை 16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 233,725,974 ஆலும், நிதி வருமானம் 15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 24,362,984 ஆலும், ஏனைய வருமானம் 14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6,255,925 ஆலும் குறைவடைந்தமை மற்றும் நிகழ்ச்சித்திட்ட செலவினம் 15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 81,313,379 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான இலாபத்தன்மை விகிதங்கள் மற்றும் திரவத்தன்மை விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **இலாபத்தன்மை விகிதங்கள்** | **2018** | **2017** |
|---|---|---|
| | % | % |
| மொத்த இலாப விகிதம் | 49 | 63 |
| தேறிய இலாப/(நட்ட) விகிதம் | (52) | (20) |

| **திரவத்தன்மை விகிதங்கள்** | **2018** | **2017** |
|---|---|---|
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 03 | 04 |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 03 | 04 |

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மொத்தலாப விகிதம் 14 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் பற்றாக்குறை 32 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன 01 தடவையால் குறைவடைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,037,763 தொகையான 12 ஆங்கில திரைப்படங்களின் பெறுமதி அருவச் சொத்துக்களாக கணக்குகளிற்கு எடுக்கப்படுவதற்குப் பதிலாக முற்கொடுப்பனவொன்றாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அனைத்து திரைப்படங்களினதும் ஒளிபரப்பு செய்யப்படக்கூடிய | அத் திரைப்படங்களில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 4 திைப்படங்கள் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஒளிபரப்புச் செய்யும் உரிமையை கண்டறிந்த பின்னர் ஏனைய திரைப்படங்களை ஒளிபரப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் இணங்கப்பட்ட காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் திரைப்படங்களை ஒளிபரப்புச் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதி காலாவதியாகியிருந்ததுடன் ரூபா 1,037,763 தொகையான அவ் ஆங்கில திரைப்படங்களின் பெறுமதிக்குரிய காலக்கழிவு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் மொத்த பெறுமதியானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்கொடுப்பனவுகளாக கருதப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | கம்பனியின் முன்னாள் ஊழியரொருவரிடமிருந்து 2011 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட மோசடி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய மிகுதி தொகை ரூபா 1,210,620 ஆனதுடன் இது தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் போது அதற்காக பிடியாணை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதனை வழங்குவதற்கு ஊழியருடைய முகவரியை கண்டறிய முடியாதிருந்தது. அவ் மொத்தத் தொகைக்கும் நட்டக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஐரீனன் எவ்எம் இன் முன்னாள் கணக்காளரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பாக பணத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுத்த போது அவர் குடியிருக்கும் இடத்தை கண்டறிய முடியாதிருந்தது. மேலும் சட்டப் பிரிவால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மோசடிகளை தவிர்ப்பதற்கு போதியளவு உள்ளகக் கட்டுப்பாடு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்யும் போது தணிக்கைக் குழுவின் (Preview Committee) பரிந்துரை பெறப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 11 தொலைக்காட்சி நாடகங்களிற்காக தணிக்கை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கான சான்றெதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் 11 தொலைக்காட்சி நாடகங்களில் 6 தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்பப்பட்டதன் விளைவாக | தணிக்கைக் குழுவின் பரிந்துரை காணப்படாத போதிலும் தொலைக்காட்சி நாடகங்கள் உயர் தரத்திலும் புகழ்பெற்றும் காணப்பட்டால் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. | தணிக்கைக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 20,149,473 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தணிக்கைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொலைக்காட்சி நாடகங்களின் தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஒளிபரப்புவதற்கு தெரிவு செய்வதற்கான நடைமுறைக்கு முரணாக ஒளிபரப்புவதற்கு பொருத்தமற்றதாக பரிந்துரை செய்யப்பட்ட சூர்ய வச்சஸ மற்றும் ராகு ஆகிய 2 தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதற்கு பிரதிப் பொது முகாமையாளரால் (செயன்முன்னேற்றம்) நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அவ் 2 தொலைக்காட்சி நாடகங்களிற்காக ஏற்பட்ட கிரயம் ரூபா 19,550,000 ஆக இருந்ததுடன் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 3,648,594 ஆக இருந்தது. ஆகையால் நட்டம் ரூபா 15,901,406 ஆக காணப்பட்டது. | மேற்குறிப்பிடப்பட்டவாறு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது. | தணிக்கைக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மிது தொலைக்காட்சி நாடகம் 100 அத்தியாயங்களாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் காரணமெதுவும் வழங்கப்படாமல் 61 அத்தியாயங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 61 அத்தியாயங்களிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 32,141,996 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட இலாபம் ரூபா 20,551,996 ஆக இருந்தது. தொலைக்காட்சி நாடகம் 61 அத்தியாயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக கம்பனி மேலும் இலாபத்தை உழைப்பதற்கான வாய்ப்பை இழந்திருந்தது. | விலைமதிப்பு (ratings) குறைவடைவதால் நிகழ்ச்சித்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவு குழுவின் தீர்மானம் காரணமாக தொலைக்காட்சி நாடகத்தை ஒளிபரப்பு செய்தல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | முறையான மதிப்பீடொன்றை கொண்டிராமல் வருமானத்தை உழைக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படக் கூடாது. |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கும்பியோ தொலைக்காட்சி நாடகத்தின் இறுதி அத்தியாயத்தை ஒளிபரப்புச் செய்வதற்காகவும் முக்கிய நடிகர்களை மதிப்பிடுவதற்கான விழா செயற்பாட்டிற்காகவும் கொழும்பிலுள்ள மிகச்சிறநத ஹோட்டல் ஒன்றில் நேரடி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,900,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தும் தேவைப்பாடு மற்றும் அது தொடர்பான அங்கீகாரம் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்திற்கு அதிவிசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக இதை நடாத்தும் தேவைப்பாடு காணப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | அத்தகைய மதிப்பீடு காணப்பட்டால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வரன்முறைகள் (criteria) உருவாக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 நாட்கள் தாமதத்துடன் 2019 மார்ச் 29 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதமொன்று காணப்பட்டதுடன் தொடர்ந்துவரும் ஆண்டில் அத்தகைய தாமதங்களை தவிர்ப்பதற்கும் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய காலப்பகுதியினுள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |